# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 247/நகராட்சி/2015**

**நாள் : 24/12/2018**

**திரு S.R. சித்தவேலு,**
**சென்னை – 75.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**பம்மல் நகராட்சி, பம்மல்.** – **எதிர் மனுதாரர்**

சென்னை, பம்மல், பசும்பொன் நகர் 9 (B) மஞ்சன் தெரு முகவரியில் வசிக்கும் திரு S.R. சித்தவேலு அவர்களின் 12.10.2015 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக பம்மல் நகராட்சி ஆணையர் மற்றும் செங்கல்பட்டு நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குர் ஆகியோரின் அறிக்கைகள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, பம்மல், பசும்பொன் நகர் 9 (B) மஞ்சன் தெரு முகவரியில் வசிக்கும் திரு S.R. சித்தவேலு என்பவர், பம்மல் நகராட்சிப் பகுதிகளில் செயல்பட்டுவரும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ஆந்திரா வங்கி போன்ற வங்கிகளில் பணியாற்றி வரும் அலுவலர்களிடம் தொழில் வரி வசூலிப்பது இல்லை என்றும் இதனால் நகராட்சிக்கு ரூபாய் 19,32,716/– வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளார். மேலும், தொழில்வரி வசூலிக்கத் தவறிய நகராட்சி அலுவலர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவித்துள்ளதுடன் தொழில் வரி சம்பந்தப்பட்ட முறையான பதிவேடுகளை பராமரிக்கவும் தவறியுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளார். தொழில் வரி சம்பந்தப்பட்ட இதுபோன்ற குறைபாடுகள் பம்மல் நகராட்சியில் மட்டுமின்றி மாநிலத்தின் பிறபகுதிகளிலும் உள்ளதெனவும் தெரிவித்துள்ளார்.

2. பம்மல் நகராட்சிக்கு தொழில் வரி வகையில் ரூ.19,32,716/– வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தணிக்கை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளது குறித்து பம்மல் நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. 2012–2013–ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கையில், தொழில் வரி சம்பந்தப்பட்ட இழப்பு குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றும், சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் வகையில் மட்டுமே காலங்கடந்த வரி இனங்களாக ரூ.23,56,811/– எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது என்று நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். எனினும், மேற்குறிப்பிட்ட நிலுவைத் தொகையினை வசூலிக்கத் தவறி சம்பந்தப்பட்ட நகராட்சி அலுவலர்கள் மீது 1970–ஆம் ஆண்டு

நகராட்சிப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் படி வசூலிக்கவோ அல்லது ஈடு செய்யவோ உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என தணிக்கை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக நகராட்சி ஆணையர், இழப்பீடுகளுக்கு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துள்ளார். மேலும், 2008–2009 முதல் அரையாண்டு முதல் தொழில்வரி கேட்பு கணினி மூலம் பராமரிக்கப்பட்டு வருவதாகவும், நகராட்சிப் பகுதியில் செயல்பட்டுவரும் வங்கிகளுக்கு தொழில் வரி நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். வசூலிக்கப்பட்ட நிலுவை மற்றும் நடப்பு பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு வருவதையும் குறிப்பிட்டுள்ளார். வாகன உரிமையாளர்களிடம் தொழில் வரி வசூலிக்கப்படுவதில்லை என்றும் ஆனால் வங்கிகள் மற்றும் திருமண மண்டபங்களுக்கு தொழில் வரி விதித்து வசூலிக்கப்பட்டு வருவதையும் தெரிவித்துள்ளார்.

3. பம்மல் நகராட்சியின் 21 வார்டுகளிலும் 2016–2017–ஆம் ஆண்டின் சொத்துவரி நிலுவைத் தொகை விவரங்களையும் நகராட்சி ஆணையர் சமர்ப்பித்துள்ளார். 2016–2017–ஆம் ஆண்டின் சொத்துவரி நிலுவைத் தொகை ரூ.4.50 கோடி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட தொகையில் ரூபாய் 18 இலட்சம் மட்டுமே வசூலிக்கப்பட்டுள்ளது. நிலுவைத் தொகை வசூலிப்பு சதவிகிதம் 6.22 மட்டுமே. மேலும், 2016–2017–ஆம் ஆண்டின் நடப்பு சொத்துவரியில் மட்டுமே கணிசமான தொகை வசூலிக்கப்பட்டுள்ளது. எனவே, நடப்பு நிதி ஆண்டு வரை நடப்பு மற்றும் நிலுவை சொத்துவரிகளைக் கணக்கிட்டு அத்தொகைகளை வசூலிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென பம்மல் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது. சொத்துவரி மற்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள இனங்கள் சம்பந்தமான தணிக்கையில் உரிய கவனம் செலுத்திடவும், உரிய தொடர் நடவடிக்கைகள் எடுத்து உள்ளாட்சி அமைப்புகளில் நிலுவையில் வைத்திருக்கும் இனங்கள் மீது தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் உள்ளாட்சி நிதித் தணிக்கை ஆணையருக்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 24–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

மு. பழனிவேல்

செயலாளருக்காக.

27.12.18

பெறுநர்

1. திரு S.R. சித்தவேலு,
9(B) மஞ்சன் தெரு, பசும்பொன் நகர்,
பம்மல், சென்னை – 75.

2. நகராட்சி ஆணையர்,
பம்மல் நகராட்சி, பம்மல், சென்னை --75.

3. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை ஆணையர்,
ஒருங்கிணைந்த நிதித்துறை வளாகம்,
சைதாப்பேட்டை, சென்னை–15.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி